IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 144 /2014
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : லலிதா | Caste | : - |
| Husband's Name: | சத்யநாதன் | Calling | : - |
| Village : | முத்தரசிகுப்பம் கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 3 day of December , 2018.

Cross Examination

எனது ஊர் முத்தரசிகுப்பம் கிராமம் ஆகும். நான் பிறந்ததிலிருந்து முத்திரசி குப்பத்தில் தான் வாழ்ந்து வருகிறேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். ஆங்கிலம் எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தான் வழக்கறிஞரிடம் அச்சங்கதிகளை கூறினேன். நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி தாவா சொத்தில் என்னுடைய சுவாதீனத்திற்கு இடையூறு செய்வதால் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலை நான் படித்து பார்த்தேன். பிரதிவாதி அவரது பதிலில் தாவா சொத்து அவருக்கு சொந்தமானது என்றும், அவர் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் கூறியுள்ளார் என்றால் சரிதான். அவர் அவரது பதிலில் இயேசு என்பவர் பொது அதிகாரப்பத்திரம் தாவா சொத்து குறித்து எழுதி கொடுப்பதற்கு அவருக்கு உரிமையில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் என்னுடைய உரிமையை பிரதிவாதி மறுத்ததால் நான் என்னுடைய தாவாவில் பரிகாரத்தை விளம்புகை பரிகாரமாக மாற்றி கோரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும், பிரதிவாதி தான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருக்கிறார்

என்றும், நான் என்றுமே தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்ததில்லை என்று கூறினால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் என்றிலிருந்து இருந்து வருகிறது என்றால் 24.04.2009-லிருந்து இருந்து வருகிறது. வா.சா.ஆ7 ஆவணத்தில் அந்த ஆவணம் என்று எந்த மாதத்தில், வருடத்தில் மற்றும் தேதியில் வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனினும், பசலி வருடம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சிப்பந்தி வேலை செய்துவருகிறேன். நான் எங்கே சிப்பந்தியாக வேலை செய்துவருகிறேன் என்றால் ஏறந்தாங்கல் புத்தூரில் வேலை செய்துவருகிறேன். பொதுவாக வரிரசீது கொடுக்கும் பொழுது தேதி, மாதம் குறிப்பிட்டு தான் கொடுக்கப்படும் என்றால் ஆமாம். வா.சா.ஆ7-ஐ தவிர நான் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் வேறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாவா சொத்தின் சிட்டாவை தாக்கல் செய்துள்ளேன். நான் கூறும் சிட்டாவான வா.சா.ஆ8-ல் என்னுடைய பெயர் மட்டும் இல்லாமல் பிரதிவாதி ஜார்ஜ் பெயர் மற்றும் அவரது சகோதரர்கள் பெயர்கள் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணத்தை தவிர தாவா சொத்தின்அனுபவத்தை குறிக்கும் வகையில் அடங்கல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வரிரசீது ஆண்டு, தேதி, மாதம் இல்லாத ஒரேஒரு வரிரசீது மட்டும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வரிரசீதிலும் தானாக நானே சென்று கட்டியதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதுபோல் ரசீதுகளில் எப்பொழுதும் அவ்வாறு தான் எழுதுவார்கள். எப்பொழுதும் அவ்வாறு தான் எழுதுவார்கள் என்பதை குறிக்கும் வகையில் நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தானாக என்று அனைத்து வரிரசீதுகளிலும் குறிப்பிடப்படுகிறது என்பது நான் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றும், வரியை கேட்டு நோட்டீஸ் அனுப்பிய பிறகே வரி செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல, எனது சொத்திற்கு

நானே சென்று வரி செலுத்தினேன் அது தவறில்லை. தாவா சொத்திற்கான அசல் கிரையப்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன். 2009-லிருந்து கிரையம் வலகத்திலிருந்து அசல் ஆவணத்தை பெற்றுக்கொள்ள நான் எந்த வித முயற்சியும் எடுக்க வில்லை என்றால் அசல் ஆவணத்தை நான் பெற்றுக்கொண்டேன். மேற்படி அசல் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனினும், தற்பொழுது நீதிமன்றம் கேட்டாலும் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.